# ஒட்டன்சத்திரம் நகராட்சி

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 68 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.30.06.2018—ன்படி 1920—ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B—ன் கீழ் அவசரக் கூட்டம் நாள். 31.01.2019 (வெள்ளி கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 30.01.2019

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் : 1**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பேருந்து நிலையத்தில் பொது மக்கள் மற்றும் பயனிகளின் நலன் கருதி மின் விளக்குகள் பழுது நீக்கம் செய்தல் மற்றும் கூடுதல் மின் விளக்குள் அமைக்கும் பணிக்கு 07.01.2019ல் கோரப்பட்ட விலைபுள்ளிப்புள்ளிகளின் பட்டியல் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | பொருள்கள் விபரம் | எம்.எம்.கே கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் ரூ | ஜி. வி கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் ரூ | கே.ஆர். கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் ரூ |
|---|---|---|---|---|
| 1 | 25W Bulb | 800/ No | 775 / No | 850 / No |
| 2 | 7/20 CTS Wire | 5000 /Coil | 4450 /Coil | 5500 /Coil |
| 3 | 2.0 sq GM Wire | 4000 /Coil | 3575 /Coil | 4500 /Coil |
| 4 | 1.0 sq GM Wire | 1500 /Coil | 1350 /Coil | 1750 /Coil |
| 5 | Holder | 35 / No | 30 /No | 40 / No |
| 6 | 7/20 GI wire | 175 /Kg | 150 /Kg | 200 /Kg |
| 7 | 2 way ril | 3 / No | 2 No | 4 / No |
| 8 | Labour charge | 650 /Labour | 600 /Labour | 700 /Labour |

மேற்காணும் வரப்பெற்ற நிறுவனங்களில் கலம் எண்.2–ல் உள்ள ஜி.வி கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனம் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ளதை தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணிக்கான வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண். 1**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 2**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் கடந்த இரண்டு ஆண்டு தமிழக அரசின் திட்டப்பணிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல் அவர்களின் பரிந்துரையின் பேரில் கீழ்க்காணும் தினசரி நாளிதழ்கள் புத்தாண்டு மற்றும் பொங்கல் மலரில் வெளியீடு செய்தமைக்காக, மேற்படி நாளிதழ் நிறுவனங்கள் மூலம் வரப்பெற்ற பட்டியல் தொகையினை வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தினமணி (புத்தாண்டு மலர்) | 26,250/– |
| 2 | தமிழ் முரசு (பொங்கல் மலர்) | 18,900/– |
| 3 | மாலை முரசு (பொங்கல் மலர்) | 115,50/– |
| 4 | மாலை மலர் (பொங்கல் மலர்) | 16800/– |

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி விளம்பர செலவின தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிடவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 2**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 3</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனங்கள் உள்ளூர் பணி மனைகளில் பழுதுகள் முழுவதும் சரி செய்யப்பட்டு, வாகனங்கள் பழுது செலவு பட்டியல் தொகை கீழ்க்கண்டவா வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | வாகனங்களின் விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | TN 57 AW 2523 Bill date.17.07.2018 | 3550 |
| 2 | TN 57 AW 4437 Bill date. 23.10.2018 | 4190 |
| 3 | TN 57 AW 2197 Bill date .07.09.2018 | 750 |
| 4 | TN 57 AW 2197 Bill date .14.12.2018 | 8379 |
| 5 | TN 57 AW 2197 Bill date .15.12.2018 | 2750 |
| 6 | TN 57 AW 5524 Bill date .18.01.2019 | 200 |
| | மொத்தம் | 19819 |

மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் பழுதுகள் முழுவதும் சரிசெய்யப்பட்டு வாகனங்கள் பணி மனையிலிருந்து நல்ல முறையில் வரப்பெற்று இயக்கத்தில் உள்ளது. மேற்படி வாகனங்களின் பழுது நீக்கப் பணி செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.19,819/– வரப்பெற்றுள்ளதை தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, அதற்கான செலவின தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, இந்நகராட்சி திரு.வீரபாகு (து.ஆ) அவர்களுக்கு தொகையை வழங்கிடவும், அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 3**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 4</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN 57 AW 4437 TATA ACE வாகனத்தில் டயர்கள் பழுது ஏற்பட்டுள்ளதால், அதற்கான 3 எண்ணம் 155–D12 டயர்கள் உள்ளூர் நிறுவனம் Ganapathy Tyres, ஒட்டன்சத்திரம் நிறுவனத்தின் மூலம் வரப்பெற்று இயக்கத்தில் உள்ளது. மேலும் பொது சுகாதாரம் வாகனத்தின் டயர்களின் செலவினம் ரூ.7050/– ஐ Ganapathy Tyres என்ற நிறுவனத்திற்கு தொகை வழங்கிட தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரம் பணியின் அவசர அவசியம் கருதி பணிக்கான வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.6030/2018/எச்1)

**தீர்மான எண். 4**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 5**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுகாதாப் பிரிவு எதிர்வரும் மழைக்காலத்தினை முன்னிட்டு துப்புரவு பணியாளர்களுக்கு பணி பாதுகாப்பு உபகரணங்கள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் விநியோகம் செய்யும் பணிக்கு உத்தேச செலவீனம் தொகை ரூ.6.00 இலட்சம் தீர்மான எண்.263 நாள்.16.11.2018–ம் நாளில் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, பாதுகாப்பு உபகரணங்கள் அரசு சார்ந்த நிறுவனமான தமிழ்நாடு மல்டி பர்போஸ் இண்ட்கோ சர்வ், திருச்சி அவர்கள் மூலம் விநியோக செய்யப்பட்டு, பட்டியல் தொகை ரூ.6,63,000/– வரப்பெற்றது. மேற்படி பட்டியல் தொகையினை தமிழ்நாடு மல்டி பர்போஸ் இண்ட்கோ சர்வ், திருச்சி அவர்களுக்கு வழங்குவதற்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி, துப்புரவு பணியாளர்களுக்கு பணி பாதுகாப்பு உபகரணங்கள் விநியோகம் செய்யவும், அதற்கான கூடுதல் செலவினத்தை தனிஅலுவரின் முன்அனுமதி பெற்று வழங்கவும், மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கெள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1193/2018/எச்1)

**தீர்மான எண். 5**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் :6**

ஒட்டன்சத்திரம் நகராட்சி (TUFIDCO- 2018-19) திட்டத்தின் கீழ் ரூ. 105.23 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வீட்டு குடிநீர் இணைப்புகள் 1 முதல் 18 வார்டு பகுதிகளில் (3000 எண்ணம்) வழங்கும் பணிகள் மேற்கொள்ள அரசாணை எண். 44 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ2) நாள்.24.02.2016–ன்படி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 12145/2018/WS1 நாள். 15.11.2018–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களால் ந.க.எண். 13277/2017/டி.ஓ2 நாள். 06.12.2018–ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 22.01.2019–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை அவர்கள் வாயிலாக அக்கார்டு விளம்பர நிறுவனம், சென்னை மூலம் மாநில அளவிலான அரசு ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் மற்றும் தினசரி நாளிதழ்களில் மாநில அளவில் 23.12.2018–ம் நாள் வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.55,283/– மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை சென்னை அக்கார்டு விளம்பர நிறுவனத்திற்கு வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணிகளுக்கான மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தமைக்கான பட்டியல் தெரிகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும், மேற்படி செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 6**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 7**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பறைகள் பழுதடைந்துள்ளதை தொடர்ந்து, மேற்படி பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பயனிகள் மற்றும் பொது மக்களின் பொது சுகாதார நலன் கருதி, மேற்படி பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பறைகள் மராமத்து பணி மேற்கொள்ள ரூ.3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது ஆணையாளரின் பார்வைக்கும், ஒப்புதலுக்காவும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 7**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் :8**

ஒட்டன்சத்திரம் நகராட்சி அரசாணை (நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.19.09.2008–ன்படி நகராட்சியில் கீழ்க்காணும் இனங்களுக்கு 01.04.2016 முதல் 31.03.2019 முடிய மூன்று ஆண்டுகளுக்கு சுங்க கட்டண வசூலுக்கான குத்தகை உரிமை பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு 31.03.2019 நாளுடன் மூன்று ஆண்டுகள் முடிவுறுவதால், மேற்படி இனங்களுக்கு மேலும் மூன்று ஆண்டுகளுக்கான குத்தகை உரிமைக்கு 25.01.2019 பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரபட்டத்தில் ஒப்பந்தபுள்ளிகள் ஏதும் வரப்பெறாத நிலையில் பொது ஏலத்தில் கோரப்பட்ட உயர்ந்த பட்ச ஏலம் கீழ்கண்டவாறு

| வ. எண் | குத்தகை இனங்கள் | உயர்ந்த பட்சம் ஏலதாரர்கள் | உயர்ந்த பட்சம் ஏல தொகை |
|---|---|---|---|
| 1 | பேருந்துநிலையத்தினுள் வரும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமை | திரு. ரகுபதி, த/பெ.பெருமாள்சாமி, 5/123, பூஞ்சோலை தோட்டம், பெரியகோட்டை, சத்திரப்பட்டி, ஒட்டன்சத்திரம். | ரூ.13,75,000/– |
| 2 | பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமை | திரு.த.கணேசன், த/பெ.தர்மலிங்கம், காந்தி நகர், ஒட்டன்சத்திரம் | ரூ.3,50,000/– |

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி இனங்களுக்கு 25.01.2019–ம் நாளில் நடைபெற்ற பொது ஏலத்தில் மேற்காணும் இனங்களுக்கு பொது ஏலம் உயர்ந்தபட்ச தொகையாக உள்ளது. மேற்படி இனங்களுக்கு சென்ற ஆண்டு குத்தகை தொகையில் கூடுதல் தொகைக்கு பொது ஏலம் கோரப்பட்டுள்ளது. மேற்படி உயர்ந்தபட்ச ஏல தொகைக்கு குத்தகைதாரர்களுக்கு மூன்றாண்டுகளுக்கான உரிமை வழங்கவும் முதலாம் ஆண்டு உரிமைக்கான குத்தகை தொகை வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 8**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 9**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குச் சொந்தமான வாரச்சந்தையின் ஞாயிற்றுக்கிழமை கூடும் சந்தையின் குத்தகைதாரர் திரு.ஏ.அகிலன் த/பெ. ரவிதேவர், திண்டுக்கல் என்பவர் நகராட்சியில் தன்மீது வெளி நபர்களால் பொய் புகார் அளித்து தன்னை வெளியேற்ற சதி நடப்பதாகவும், தாம் பெருந்தொகை செலுத்தி சந்தைகளை நடத்தி வருவதாகவும், அவ்வாறு வெளியேற்றினால், ஈடு செய்ய முடியாத நஷ்டம் ஏற்படும் எனவும், எனவே நகராட்சி எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மேற்படி குத்தகைதாரரால் பழனி சார்பு நீதிமன்றத்தில் ஓ.எஸ். எண்.362/2015–ல் வழக்கு தாக்கலாகி வழக்கு நடைபெற்று வந்த நிலையில், மேற்படி வழக்கினை 06.10.2018–ம் நாள் மாண்பமிகு நீதியரசர் அவர்களால் தள்ளுபடி செய்து தீர்புரை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படி வழக்கினை எதிர்கொண்டமைக்கு தீர்புரை நகல் கட்டணம் செலுத்தி பெற்று வழங்கியமைக்காகவும், வழக்கறிஞர் திரு. பி.சேனாபதி, பி.எஸ்.சி., பி.எல்., பழனி அவர்கள் மூலம் வழக்கு கட்டணமாக ரூ.12,000/– கேட்டு வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி வழக்கு கட்டணம் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 9**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 10**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2017–2018–ன் கீழ் 1 முதல் 18 வார்டு பகுதிகளில் ரூ. 800 இலட்சம் மதிப்பீட்டில் சாலை, வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள அரசாணை எண். 44 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ2) நாள்.24.02.2016–ன்படி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 21422/2017/இ3 நாள். 03.10.2017–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களால் ந.க.எண். 24545/2017/டி.ஓ2 நாள். 14.11.2017–ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளில் சிப்பம்–4 தொகை ரூ.200.00 இலட்சத்திற்கான ஒப்பந்தப்புள்ளி நாள்.11.12.2017 மற்றும் 19.04.2018–ல் ஏதும் வரப்பெறாத நிலையில், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 21422/2017/E1 நாள். 19.09.2018–ல் திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 07.02.2019–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை அவர்கள் வாயிலாக பிரைட் அட்வர்டைசிங் விளம்பர நிறுவனம், சென்னை மூலம் மாநில அளவிலான அரசு ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், டெக்கான் க்ரோனிக்கல் மற்றும் நமது புரட்சி தலைவி அம்மா தினசரி நாளிதழ்களில் மாநில அளவில் 12.01.2019–ம் நாள் வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.55,282/– மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை சென்னை பிரைட் அட்வர்டைசிங் விளம்பர நிறுவனத்திற்கு வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணிகளுக்கான மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தமைக்கான பட்டியல் தெரிகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 10**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 11**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2018–2019–ன் கீழ் 1 முதல் 18 வார்டு பகுதிகளில் ரூ. 1500.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை, வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள அரசாணை எண். 44 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ2) நாள்.24.02.2016–ன்படி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 12981/2018/இ3 நாள். 17.07.2018–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களால் ந.க.எண். 20308/2018/டி.ஓ2 நாள். 23.08.2018–ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளில் சிப்பம்–7 தொகை ரூ.200.00 இலட்சத்திற்கான ஒப்பந்தப்புள்ளி நாள்.27.09.2018–ல் ஏதும் வரப்பெறாத நிலையில், மேற்படி பணிக்கு 31.01.2019–ம் நாள் மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை அவர்கள் வாயிலாக மது ஆட்ஸ் விளம்பர நிறுவனம், சென்னை மூலம் மாநில அளவிலான அரசு ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், தி இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் மாலை முரசு தினசரி நாளிதழ்களில் மாநில அளவில் 09.01.2019–ம் நாள் வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.72,188/– மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை சென்னை மது ஆட்ஸ் விளம்பர நிறுவனத்திற்கு வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணிகளுக்கான மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தமைக்கான பட்டியல் தெரிகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 11**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 12**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4491/2015/பி3 நாள்.24.08.2018–ல் நகராட்சி பகுதிகளில் அனைத்து வார்டுகளிலும் உயர்தரமான குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து, அதற்கான ஒப்பந்தப்புள்ளி நாள்.31.10.2018 மற்றும் 29.11.2018–ல் ஏதும் வரப்பெறாத நிலையில், நாள்.06.02.2019–ல் மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை அவர்கள் வாயிலாக மார்க் மீடியா கம்யுனிக்கேசன்ஸ் விளம்பர நிறுவனம், சென்னை மூலம் மாநில அளவிலான அரசு ஒப்பந்தப்புள்ளி செய்தி மலலும், தினமணி மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் தினசரி நாளிதழ்களில் மாநில அளவில் 20.01.2019–ம் நாளில் தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழ்களில் வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.90,562/– மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை சென்னை மார்க் மீடியா கம்யுனிக்கேசன்ஸ் விளம்பர நிறுவனத்திற்கு வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணிகளுக்கான மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தமைக்கான பட்டியல் தெரிகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 12**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 13**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் புதிதாக வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கும் பணிக்கு Revolving Fund of UIDSSMT 2018–2019 ல் ரூ.105.23 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர் ,சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.13277/2018/WS1 நாள்,19.06.2018.–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்படி பணிக்கு தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.15040/2017/DO2 நாள்.06.12.2018 –ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 22.01.2019–ந் தேதியில் இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் திரு.எம்.எஸ்.சூர்யா ஏஜென்சி, திண்டுக்கல் மற்றும் திரு.கே.எஸ்பி.அன்கோ, சேலம் ஆகிய இருவரின் தகுதிக்காண் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்வதால் மேற்படியாளர்களின் விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) 30.01.2019-ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது விபரம் பின்வருமாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எம்.எஸ்.சூர்யா ஏஜென்சி,திண்டுக்கல் | மதிப்பீட்டினைக்காட்டிலும் 5.02 % அதிகம் |
| 2 | திரு.கே.எஸ்பி.அன்கோ சேலம் | மதிப்பீட்டினைக்காட்டிலும் 8.01 % அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதல் விலை விகிதமாக இருப்பதால், மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு.எம்.எஸ்.சூர்யா ஏஜென்சி,திண்டுக்கல் என்பவரின் மதிப்பீட்டினைக்காட்டிலும் 5.02% கூடுதல் விலை விகிதத்தினை குறைத்து தரக்கோரி சம்மதக்கடிதம் (Consent Letter) கோரியதில் மேற்படியார் தனது 31.01.2019 தேதிய கடிதத்தில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.80 % உயர்வு சதவீதத்தில் மட்டுமே செய்து தர இயலும் என கடிதம் அளித்துள்ளது. தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்காணும் திட்ட பணியினை 31.08.2019–க்குள் முழுவதுமாக முடித்து பணி முடிவறிக்கை நிதி பயனீட்டு சான்றிதழ் அளித்திட நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரையில் பணிக்கப்பட்டுள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால், ஏற்படும் காலாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், நகராட்சி வருவாய் தரத்தக்க பணி என்பதால் மதிப்பீட்டு உயர்வு சதவீதம் நகர்மன்ற தனி அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்டு வருவதாலும், தமிழ்நாடு நகராட்சிகள் பொறியியல் கையேடு விதிமுறை 2.7.2–ன்படியும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

**தீர்மான எண். 13**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 14**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தைப்பூச திருவிழா–2019 நடைபெறுவதை முன்னிட்டு பாதையாத்திரை பக்கதர்கள் இந்நகராட்சி வழியாக அதிஂக அளவில் செல்வதால் நாள் ஒன்றுக்கு 4 MTS குப்பைகள் சேர்கிறது. அதனை பக்தர்களுக்கு இடையூறின்றி அகற்றுவதற்கு 20 கூட்டுமார்கள் உள்ளூர் மார் பின்னும் நபர் வசம் கூட்டுமார்கள் வாங்கிக்கொள்ள மன்றத்தின் முன்அனுமதி 19.12.2019ம் நாளில் பெறப்பட்டு, 04.01.2019–ல் கோரப்பட்ட விலைபுள்ளிப்புள்ளிகளின் பட்டியல் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | பெயர் / முகவரி | கூட்டுமார் ஒன்றுக்கு ரூ |
|---|---|---|
| 1 | திரு.ஹச்.முகமது ரஸ்மி,<br>ஹச்.எம்.ஆர்.கன்ஸ்ட்ரக்சன்,<br>ஒட்டன்சத்திரம் | 800 |
| 2 | திரு.ரா.கணேசன்,<br>த/பெ.ராமசாமி,<br>செக்போஸ்ட், ஒட்டன்சத்திரம் | 700 |

மேற்காணும் வரப்பெற்ற நிறுவனங்களில் வ.எண்.2–ல் உள்ள திரு.ரா.கணேசன், ஒட்டன்சத்திரம் என்பவர் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ளதை தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண். 14**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 15**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதிகளில் பொது மற்றும் சமுதாய கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்கு, 2 Mobijet இயந்திரம் வினியோகம் செய்வதற்கு தனிஅலுவரின் முன் அனுமதி நாள்.18.12.2018–ல் பெறபட்டு, 24.12.2018–ம் நாள் அன்று கோரப்பட்ட விலைபுள்ளிப்புள்ளிகளின் பட்டியல் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | பெயர் / முகவரி | Whale Enterprise Private Limited, Coimbatore | Bharath Industries, Coimbatore | Pneumatic Controls, Coimbatore |
|---|---|---|---|---|
| 1 | கழிப்பறைகளை சுத்தம் செய்யும் Mobijet இயந்திரம் (ஒன்றுக்கு) | 1,79,850/- | 1,95,325/- | 2,03,896/- |

மேற்காணும் வரப்பெற்ற நிறுவனங்களில் கலம் எண்.1–ல் உள்ள Whale Enterprise Private Limited, Coimbatore என்ற நிறுவனம் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ளதை தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண். 15**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 16**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவு டிராக்டர் TN 57 R 0281 மற்றும் TN 57 U 5267 வாகன பழுது நீக்கப் பணிக்கு அரசு சார்பு நிறுவனமான அக்ரோ சர்வீஸ் பணி மேற்கொள்ள தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நாள். 04.01.2019–ல் விலைப்புள்ளி வரப்பெற்ற விபரம் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | விபரம் | DD 665 ஒட்டன்சத்திரம் வட்டார அக்ரோ இன்ஜினியரிங் அன் சர்வீஸ் கோ ஆப் சென்டர் லிட், ஒட்டன்சத்திரம் | A 3081 வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு மையம் லிட், வத்தலக்குண்டு |
|---|---|---|---|
| 1 | பொது சுகாதாரம் பிரிவு வாகனம் மராமத்து செய்யும் பணி வாகன எண் TN 57 U 5267 | 81750/- | 84100/- |
| 2 | பொது சுகாதாரம் பிரிவு வாகனம் மராமத்து செய்யும் பணி வாகன எண் TN 57 R 0281 | 87200/- | 91250/- |

மேற்காணும் வரப்பெற்ற நிறுவனங்களில் கலம் எண்.1–ல் உள்ள DD 665 ஒட்டன்சத்திரம் வட்டார அக்ரோ இன்ஜினியரிங் அன் சர்வீஸ் கோ ஆப் சென்டர் லிட், ஒட்டன்சத்திரம் என்ற நிறுவனம் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ளதை தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி வேலை ஆணை வழங்கி, பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம் (ந.க.எண்.465/2018/H1)

**தீர்மான எண். 16**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 17**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 முதல் 18 வார்டு பகுதிகளில் உள்ள தெருமின்விளக்குகள் பராமரிப்பு பணி நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பராமரிப்பு பணிகளுக்கான உதிரி பாகங்கள் இல்லாத நிலையில் 2018–2019–ம் ஆண்டிற்கு கூதல் செலவினமாக ரூ.3.00 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் நலன் கருதி தெரு விளக்கு உதிரி பாகங்கள் அரசு சார்பு நிறுவனங்ளில் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 17**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 18**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் 1 முதல் 18 வார்டு முடிய உள்ள பிராதான மெயின் குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை குடிநீர் தேவையின் அவசர அவசியம் கருதி உடன் சரிசெய்யும் பொருட்டு 2018–2019 ஆண்டுக்கான கூடுதல் செலவினம் ரூ.4.60 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 18**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 19**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் குடிநீர் பயன்பாடு மற்றும் பிறப்பயன்பாடுகளுக்குரிய நகராட்சி பகுதியில் 1 முதல் 18 வார்டு பகுதிகளில் உள்ளூர் நீராதரத்தை பெருக்கிடும் வகையில் அமைக்கப்பட்டுள்ள 165 ஆழ்குழாய் கிணறுகளில் மின் மோட்டார்கள் மற்றும் 42 ஆழ்குழாய் கிணற்றில் அடிகுழாய்கள் பொருத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. நகராட்சி வார்டு பகுதிகளில் உள்ள மின் மோட்டார் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடன் சரிசெய்யும் பொருட்டு 2018–2019 ஆண்டுக்கான கூடுதல் செலவினம் ரூ.4.70 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 19**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 20**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2018–2019–ம் ஆண்டுகளில் திட்டப்பணிகள், குடிநீர், பொதுசுகாதாரம் மற்றும் இதரப்பணிகளுக்காக புகைப்படங்கள், கலர் பிரிண்ட், ஆல்பம், வீடியோ கவரேஜ் மற்றும் கலர் ஜெராக்ஸ் முதலான பணிகள் மேற்கொள்ள நடப்பாண்டுக்கான கூடுதல் செலவினம் ரூ.3.80/– இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 20**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 21**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 1–வது வார்டு நாகணம்பட்டி பகுதியில் உள்ள பூங்காவிற்கு பேவர் பிளாக் சாலை மற்றும் கூடுதல் பணி செய்ய பொதுமக்களின் நலன் கருதி மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி பொது மக்களின் நலன் கருதி, தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 21**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 22**

ஒட்டன்சத்திரம் நகராட்சி விருப்பாட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் பகிர்மான குழாய்களுக்கு தேவையான கேட் வால்வுகள் விநியோகம் மற்றும் பொருத்துதல் பணி மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி பொது மக்களின் நலன் கருதி, தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 22**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 23**

ஒட்டன்சத்திரம் நகராட்சி காந்தி மார்க்கெட் நுழைவாயில் தண்ணீர் வசதியுடன் கூடிய இலவச சிறுநீர் கழிப்பிடம் அமைக்கும் பணி மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி பொது மக்களின் நலன் கருதி, தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 23**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் :24**

ஒட்டன்சத்திரம் நகராட்சி நாகணம்பட்டி பகுதியில் உள்ள பூங்காவிற்கு பேவர் பிளாக் சாலை மற்றும் கூடுதல் பணி மேற்கொள்ள தொகை ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தீர்மான எண்.21 நாள்.31.01.2019–ம் நாள் தனிஅலுவலர் அவர்கள்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளுக்காக 31.01.2019–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஹச்.முகமது ரஸ்மி | 0.07 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.பி.வீராச்சாமி | 2.80% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்துபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.ஹச்.முகமது ரஸ்மி என்பவர் 0.07% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஹச்.முகமது ரஸ்மி என்பவர் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 24**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 25**

ஒட்டன்சத்திரம் நகராட்சி விருப்பாட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பைப்லைன்களுக்கு தேவையான கேட் வால்வுகள் சப்ளை செய்து பொருத்தும் பணி மேற்கொள்ள தொகை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தீர்மான எண்.22 நாள்.31.01.2019–ம் நாள் தனிஅலுவலர் அவர்கள்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளுக்காக 31.01.2019–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஹச்.முகமது ரஸ்மி | 0.05 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.ஆர்.அய்யாவு | 2.46% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்துபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.ஹச்.முகமது ரஸ்மி என்பவர் 0.05% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஹச்.முகமது ரஸ்மி என்பவர் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 25**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 26</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி காந்தி மார்க்கெட் நுழைவு வாயிலில் தண்ணீர் வசதியுடன் கூடிய சிறுநீர் கழிப்பறை அமைக்கும் மேற்கொள்ள தொகை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தீர்மான எண்.23 நாள்.31.01.2019–ம் நாள் தனிஅலுவலர் அவர்கள்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளுக்காக 31.01.2019–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஹச்.முகமது ரஸ்மி | 0.06 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.ஆர்.அய்யாவு | 2.31% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்துபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.ஹச்.முகமது ரஸ்மி என்பவர் 0.06% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஹச்.முகமது ரஸ்மி என்பவர் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 26**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 27</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் குடிநீர் பயன்பாட்டிற்குரிய பிரதான மெயின் லைன் மற்றும் பகிர்மான குழாய்களில் உள்ள கேட் வால்வுகள் பழுதடைந்துள்ளதை, சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.2.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 27**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 28</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின்(MCC) கீழ் நடைபெறும் பணிகளை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நகர் வரைபடத்துடன் கூடிய வரைபடம் மற்றும் புகைப்பட ஆல்பங்கள் தயார் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 28**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 29**

ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலகத்தை சுற்றியுலூா மின் விளக்குகள், முன்பாக உள்ள CFL விளக்குகள் சரிசெய்ய தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்தமைக்காக பட்டியல் தொகை ரூ.26000/– ம் வழங்க கேட்டு வரப்பெற்றுள்ள பட்டியல் தொகையினை தாஸ் எலக்டிரிக்கல், ஒட்டன்சத்திரம் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி பணி மேற்கொண்டதற்கான பட்டியல் தொகையினை வழங்கவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 29**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 30**

ஒட்டன்சத்திரம் நகராட்சி வார்டு மறுவரையறை தொடர்பான இறுதி பணிகள் மேற்கொண்டமைக்கான கலர் பிரிண்ட்கள், புத்தகங்கள் தயார் செய்தமைக்காக பட்டியல் தொகை ரூ.93,470/– ம் வழங்க கேட்டு வரப்பெற்றுள்ள பட்டியல் தொகையினை ஆதவா சிஸ்டம்ஸ், ஒட்டன்சத்திரம் என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி பணி மேற்கொண்டதற்கான பட்டியல் தொகையினை வழங்கவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 30**

அனுமதிக்கப்பட்டது.

இடம். ஒட்டன்சத்திரம்.
நாள். 30.01.2019

தனிஅலுவலர்
மற்றும் ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி.